IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.175/2021

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | LAKSHMI |
| FATHER'S NAME | : | GURUMOORTHI |
| VILLAGE | : | SANKARAPURAM |
| OCCUPATION | : | FARMER |
| AGE | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 12th day of JUNE 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை, சுமார் 7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் 02.00 மணியளிவல் எனது ஆடு செல்வம் என்பவர் கொல்லையில் மேயந்ததால் செல்வம் எனது வீட்டிற்கு வந்து ஆட்டை இழுத்து சென்று காட்டுபக்கமாக ஓட்டிவிட்டதால் நான் எதற்காக ஆட்டை காட்டுபக்கமாக ஓட்டிவிட்டிற்கள் என்று கேட்டுகொண்டே அவர் பின்னால் சென்றபோது என்னை கையால் கண்ணத்தில் இரண்டு முறை அடித்தார். நான் கீழே விழுந்த பின்னர் எனது புடவையை பிடித்து இழுத்து மீண்டும் அடித்தார். பின்னர் எனது கணவர் வந்து தடு்ததபோது எனது கணவரை செல்வமும் அவரது மகனும் சேர்ந்து அடித்ததில் எனது கணவருக்கு மூக்கு உடைந்து 2 மாதங்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். பின்னர் அன்றைய தினமே 03.00 மணியளவில் காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்தகையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார் அளித்த பின்னர் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துகொண்டேன். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-R.Saranya.,

Judicial Magistrate,

Gudiyatham.